## உறவுமுறைக்கடிதம் ( மாதிரி )

பள்ளி இறுதித்தேர்வில் மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் பெற்ற நண்பனைப் பாராட்டி மடல் வரைதல்

17, உசுமான் சாலை
சென்னை - 17,
(நாள்)

இனிய நண்பன் சரவணனுக்கு,

நலம். நாடுவதும் அஃதே. நீ பள்ளியிறுதித் தேர்வினை நன்முறையில் எழுதியிருப்பதாகவும் பள்ளியில் முதல் மாணவனாக வரவாய்ப்புண்டு எனவும் எழுதியிருந்தாய். உன் தேர்வு முடிவினை நானும் ஆவலோடு எதிர்பார்த்திருந்தேன்.

_______ அன்று வெளியான நாளிதழ்களில் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பெற்றிருந்தன. மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் முதலிடம் பெற்றிருந்தவர்களின் புகைப்படங்களையும் பேட்டிகளையும் வெளியிட்டிருந்தன. மதுரை மாவட்ட அளவில் முதலிடம் பெற்று நீ படித்த பள்ளிக்கும் உன் பெற்றோர்க்கும் பெருமை சேர்த்துள்ளாய்.

உன்னைச் சார்ந்தவர்கள் பெருமகிழ்ச்சி அடைவது போல், உன் நண்பனாகிய நானும் மகிழ்ச்சியடைகின்றேன். நான் உன்னைப் போல் மாவட்ட அளவில் முதலாவதாக வர முடியாவிட்டாலும் எம் பள்ளியில் முதல் மாணவனாக வந்துள்ளேன்.

இரண்டாண்டுகள் கழித்து நாம் எழுதப் போகும் பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் நீ மாநிலத்தில் முதல் மாணவனாக வர என் மனமார்ந்த வாழ்த்துகளை முன்கூட்டியே தெரிவித்துக்கொள்கின்றேன்.

உன் அன்பு நண்பன்,
சி. அருமைநாதன்

உறைமேல் முகவரி :
பெறுநர்:
ப. சரவணன்,
14, சின்னக்கடைத் தெரு,
தெற்குவாசல்,

**Homefun 24-11-23**

1. விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற நண்பனைப் பாராட்டிப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

2. உன் ஊரில் நடைபெறும் திருவிழாவில் கலந்து கொள்ள வருமாறு உன் நண்பனுக்கு அழைப்புக் கடிதம் எழுது.